பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
16 09 2026 WEDNESDAY 7 15 AM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடியும், சீன அதிபரும் அண்மையில் நடத்திய பேச்சுக்களின்போது, பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- எதிர்காலத்தில் நடைபெறும் போரில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிக்கும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

- நாடுமுழுவதும் ஐந்து சட்டப்பேரவை தொகுதிகள் மற்றும் ஒரு மக்களவைத் தொகுதிக்கு அடுத்த மாதம் 6ஆம் தேதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.

- ஆஷா தொழிலாளர்களுக்கான மாதாந்திர ஊக்கத்தொகையை 6 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி தில்லி அரசு அறிவித்துள்ளது.

- இந்தியாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த நியூஸிலாந்து நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

>>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியும், சீன அதிபரும் அண்மையில் நடத்திய பேச்சுக்களின்போது, பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால், அண்மையில் நிறைவடைந்த பிரிக்ஸ் உச்சிமாநாட்டிற்கு இடையே,
பிரதமர் திரு. நரேந்திர மோடியும், சீன அதிபர் திரு. Xi Jinping-கும் சந்தித்து பேசியதை சுட்டிக்காட்டினார்.

அப்போது, இருநாடுகளுக்கும் இடையே பரஸ்பர மரியாதை, நலன்கள், உணர்வுபூர்வ விஷயங்கள் குறித்து அவர்கள் விரிவாக ஆலோசித்ததாக அவர் கூறினார்.

*முக்கிய விஷயங்களில் இருநாடுகளும் இணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் அவர்கள் அப்போது வலியுறுத்தியதாகவும் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் குறிப்பிட்டார்.*

*>>>>>><<<<<*

*எதிர்காலங்களில் நடைபெறும் போரில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிக்கும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.*

*தில்லியில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமான DRDO சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.*

*வரும் 2047ஆம் ஆண்டுக்குள் முக்கிய தொழில்நுட்பங்களில் சுயசார்பு, உள்நாட்டு உற்பத்தி, பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி உள்ளிட்டவை பலமடங்கு அதிகரித்து, உலக அளவிலான விநியோக சங்கிலியில் இந்தியா வலுவான இடத்தை பெறும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.*

*எதிர்கால தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் DRDO குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருவதாக திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.*

*>>>>>><<<<<*

*தமிழகத்தில் இரண்டு தொகுதிகள் உட்பட நாடுமுழுவதும் ஐந்து சட்டப்பேரவை தொகுதிகளுக்கும், ஒரு மக்களவைத் தொகுதிக்கும் அடுத்த மாதம் 6ஆம் தேதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.*

*தமிழகத்தின், மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளிலும், மேற்குவங்கத்தின் நந்திகிராம், ரேஜிநகர் தொகுதிகளிலும், புதுச்சேரியின் தட்டாஞ்சாவடி தொகுதியிலும் இந்த இடைத்தேர்தல் நடைபெறுகிறது.*

*இதேபோல், அஸ்ஸாம் மாநிலம், Nagaon மக்களவைத் தொகுதிக்கும் அடுத்த மாதம் 6ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது.*

*இந்த தொகுதிகளில் கடந்த 9ஆம் தேதி தொடங்கி வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.*

*மனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறும்.*

*வேட்புமனுக்களை திரும்பப் பெற வரும் வரும் 19ஆம் தேதி கடைசி நாளாகும்.*

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 9ஆம் தேதி நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்படும்.

>>>>>><<<<<

இந்தியாவின் வலுவான பொருளாதார அடித்தளம் மற்றும் தொழில்நுட்ப திறன்கள், அடுத்தகட்ட உலகளாவிய வளர்ச்சிக்கு உந்துசக்தியாக விளங்கும் என்று சர்வதேச செலாவணி நிதியம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த நிதியத்தின் துணை நிர்வாக இயக்குநர் Nigel Clarke வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியா அதிவேகமாக வளரும் முக்கிய பொருளாதார நாடாக திகழ்வதாகவும், சர்வதேச பொருளாதார விரிவாக்கத்திற்கு முக்கிய பங்களிப்பதாகவும் கூறியுள்ளார்.

அண்மையில் புதுதில்லி, மும்பை மற்றும் சென்னையில் தாம் மேற்கொண்ட ஐந்து நாள் பயணத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சந்திப்புகளை அவர் விவரித்துள்ளார்.

இந்தியாவின் சக்திவாய்ந்த தனியார்துறை, திறமையான மனிதவளம் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றை பாராட்டுவதாகவும் Nigel Clarke அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

ஆஷா தொழிலாளர்களுக்கான மாதாந்திர ஊக்கத்தொகையை 6 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி தில்லி அரசு அறிவித்துள்ளது

முதலமைச்சர் திருமதி. ரேகாகுப்தா தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில், இந்த தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 3 ஆயிரம் ரூபாயை, ஆறாயிரம் ரூபாயாக உயர்த்துவது என முடிவெடுக்கப்பட்டது.

தில்லியில் சுமார் ஆறாயிரத்து 725 ஆஷா தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

இதனிடையே, தலைநகர் தில்லியில் உள்ள கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழங்களில் பயிலும் 10 ஆயிரம் மாணவர்களுக்காக, தங்கும் விடுதிகள் கட்டுவதற்கும் தில்லி அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

>>>>>><<<<<

இந்தியாவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த நியூஸிலாந்து நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்திற்கான சட்டம், அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

இருநாடுகளுக்கும் இடையே வர்த்தகத்தை விரிவுபடுத்தவும், இறக்குமதி வரிகளை கணிசமாக குறைக்கவும் இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

நியூஸிலாந்து எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி உறுப்பினர்கள் உட்பட 93 உறுப்பினர்களின் ஆதரவுடன் இந்த ஒப்பந்தம் நிறைவேறியது.

ஒப்பந்தத்திற்கு எதிராக 29 பேர் வாக்களித்தனர்.

இதன்மூலம், இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு உடனடியான பலன்கள் கிடைக்கும் என்று அந்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. Todd McClay தெரிவித்தார்.

இந்த ஆண்டு இறுதியில் இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

>>>>>><<<<<

பங்களாதேஷில் கடந்த 2024ஆம் ஆண்டு வன்முறையை ஏவிவிட்டதாக அவாமி லீக் கட்சியைச் சேர்ந்த 7 பேருக்கு மரண தண்டனை விதித்து சர்வதேச தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது

அங்கு பிரதமராக இருந்த திருமதி. ஷேக் ஹசீனாவின் அரசுக்கு எதிராக மாணவர்கள் நடத்திய போராட்டம், பின்னர் வன்முறையாக உருவெடுத்தது.

இதில், ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உயிரிழந்தனர்.

இதனைத் தொடர்ந்து திருமதி. ஷேக் ஹசீனா பதவியை ராஜினாமா செய்துவிட்டு, இந்தியாவில் தஞ்சம் புகுந்தார்.

அவாமி லீக் கட்சிக்கு தடை விதிக்கப்பட்டு, இடைக்கால அரசு பொறுப்பேற்றது.

இந்த வன்முறை மற்றும் மோதல் குறித்து விசாரணை நடத்த அமைக்கப்பட்ட சர்வதேச தீர்ப்பாயம் கடந்த ஆண்டு நவம்பரில் திரு. ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இந்நிலையில், நஸ்ரூல் இஸ்லாம் சௌத்ரி தலைமையிலான மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, நேற்று இறுதி தீர்ப்பை அறிவித்துள்ளது.

அதில் அவாமி லீக் கட்சியின் பொதுச்செயலாளர் உபய்துல் காதர் உட்பட 7 மூத்த தலைவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

சவுதி அரேபியா மெக்கா, ஜெத்தா மற்றும் Taif நகரங்களில் நேற்று அந்நாட்டு அரசு அவசரகால எச்சரிக்கையை வெளியிட்டது.

செங்கடல் பகுதியில் அமைந்துள்ள சவுதி அரேபியாவின் முக்கிய ஏற்றுமதி முனையமான யாங்கூன் உள்ளிட்ட ஆறு நகரங்களில் இத்தகைய எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு, பின்னர் திரும்ப ப் பெறப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சம் காரணமாக அந்நாட்டு பாதுகாப்பு துறை இந்த எச்சரிக்கையை வெளியிட்டதாக அந்த தகவல்கள் மேலும் கூறுகின்றன.

>>>>>><<<<<

நேபாளத்தில் அண்மையில் நேரிட்ட பெருவெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரத்து 399 ஆக அதிகரித்துள்ளது.

திபெத் எல்லையை ஒட்டியுள்ள நேபாளத்தின் 6 மாவட்டங்களில் கடந்த மாதம் 26ஆம் தேதி நேரிட்ட பெருவெள்ளத்தில் சிக்கி, இதுவரை 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மாயமாகியிருப்பதாக மீட்பு பணியில் ஈடுபட்டுள்ள பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

பெருவெள்ள பாதிப்புகளிலிருந்து 13 ஆயிரத்து 800க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளனர்.

நேபாளத்தின் வடக்கு மற்றும் மத்திய பகுதியில் அடங்கிய ஏராளமான நகரங்கள் மோசமாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும், நிவாரணப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் பாதுகாப்பு படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<

அந்தமான் நிகோபார் தீவுகள், அருணாச்சலப் பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா, ஹரியானா, சண்டிகர் மற்றும் தில்லியில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளம், மாஹே, பஞ்சாப், மேற்குவங்கத்தின் இமயமலைப் பகுதிகள், சிக்கிம், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்காலின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வென்று தொடரை கைப்பற்றியது

தில்லியில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி, பந்துவீச்சை தேர்வு செய்தது.

இதனையடுத்து, முதலில் விளையாடிய ஆப்கானிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 159 ரன் எடுத்தது.

160 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி, 14 புள்ளி 3 ஓவரிலேயே 3 விக்கெட் இழப்பிற்கு 163 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

தொடக்க ஆட்டக்காரர்களான சஞ்சு சாம்ஸன் அபாரமாக ஆடி 57 ரன்னும், அபிஷேக் சர்மா 39 ரன்னும் சேர்த்தனர். இசான் கிஷன் 38 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் முதல் ஆட்டத்தில் ஏற்கனவே வென்றுள்ள இந்தியா, நேற்றைய வெற்றியின் மூலம் 2-0 என்ற கணக்கில் தொடரை வென்றது.

>>>>>>END<<<<<